**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 210** **நாள் : 21.12.2018**

**பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை சார்பாக, நடைபெற்ற பிளாஸ்டிக் மற்றும் டெங்கு காய்ச்சல் சிறப்பு விழிப்புணர்வு முகாமில் கல்லூரி மாணவ, மாணவியர்கள் பிளாஸ்டிக் மாசில்லா தமிழகத்தை உருவாக்க உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை சார்பாக பிளாஸ்டிக் மற்றும் டெங்கு காய்ச்சல் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்கள் சென்னை மாநகர் முழுவதும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்களின் அறிவுறுத்தலின்படி தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றன.

இதில், சிறப்பு நிகழ்வாக 20.12.2018 அன்று இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட வேப்பேரியில் உள்ள செங்கல்வராயன் பாலிடெக்னிக் கல்லூரியில் பிளாஸ்டிக் மற்றும் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சுமார் 1000 மாணவ, மாணவியர்களும் மற்றும் 50 ஆசிரியர்களும் பங்கு பெற்றனர். இம்முகாமில் ஒருமுறை பயன்படுத்தக்கூடிய மக்காத பிளாஸ்டிக் பொருட்களான பிளாஸ்டிக் தாள்கள், பிளாஸ்டிக் தட்டுகள், பிளாஸ்டிக் குவளைகள், தண்ணீர் பாக்கெட்டுகள், பிளாஸ்டிக் உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் கைப்பைகள், பிளாஸ்டிக் கொடிகள் போன்றவைகளை உபயோகிப்பதினால் ஏற்படும் சுகாதார கேடுகள் குறித்து மாணவ, மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தக்கூடிய பாலிதீன் பைகள், குவளைகள் போன்ற பிளாஸ்டிக் பொருட்களில் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உள்ளதால், இவற்றில் தண்ணீர், குளிர்பானங்கள், சூடான தேநீர், காபி முதலியவற்றை அருந்தும் போது மனித உடலில் உட்கிரகிக்கப்பட்டு உடல்நலப் பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன.

மக்காத பிளாஸ்டிக் பொருட்கள் நிலங்களில் தேங்கிவிடும் போது காலப்போக்கில் அபாயகரமான வேதிப்பொருட்கள் மண்ணுக்குள் கசிகின்றன. இதனால் மண்வளம் பாதிக்கப்படுவது மட்டுமல்லாமல் நிலத்தடி நீரில் கலந்து உடலுக்குள்ளும் செல்கின்றன.

ஒருமுறை பயன்படுத்தி தூக்கி எறியப்படுகின்ற பிளாஸ்டிக் பொருட்களை கால்நடைகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள் உண்ணுவதன் மூலம் மனிதர்களின் உணவுச் சங்கிலியில் (Human Food Chain) கலந்து, மனித உடலுக்குள் சென்று சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்துகிறது.

எனவே, இவற்றை தவிர்த்து பாரம்பரியமாக பயன்படுத்தக்கூடிய வாழை இலைகள், பாக்கு மரத்தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள் போன்றவற்றை பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் மற்றும் டெங்கு காய்ச்சலை பரப்பும் ஏடிஸ் கொசுக்கள் உருவாகும் விதம், அதன் வாழ்க்கை சுழற்சி,

உருவாகாமல் தடுக்கும் முறைகள் முதலியன குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. பின்னர், அனைவரும் பிளாஸ்டிக் தடுப்பு உறுதிமொழியினை எடுத்துக் கொண்டனர்.

பின்னர், மாணவ, மாணவியர்கள் அனைவரும் வேப்பேரி நெடுஞ்சாலையின் ஒருபுறத்தில் பிளாஸ்டிக் மற்றும் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வு பதாகைகள் மற்றும் பிளாஸ்டிக் மாற்று பொருட்களான பாக்கு மரத்தட்டுகள், துருப்பிடிக்காத எஃகு தட்டுகள், துணிப்பைகள், சணல் பைகள், கண்ணாடி குவளைகள், காகித உறிஞ்சு குழல்கள், துருப்பிடிக்காத எஃகு பாட்டில்கள் போன்றவைகளை ஏந்தி நின்று பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். டெங்கு கொசு போல் வேடமணிந்த மாநகராட்சி ஊழியரால் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில், பெருநகர சென்னை மாநகராட்சி சுகாதார கல்வி அலுவலர் முனைவர். டி.ஜி.சீனிவாசன், கல்லூரியின் முதல்வர் Dr. M. வெங்கட்ராமன், காவல்துறை ஆய்வாளர் வீரகுமார், சுகாதார ஆய்வாளர் அலெக்ஸ்பாண்டி, கல்லூரி அலுவலர் திருமதி மாலதி, துப்புரவு ஆய்வாளர் எபினேசர் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**